[1990 மே 5

(181 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண். 8—தேர்தல்கள்.

வரைவு உரை.

பேரவைத் தலைவர் அவர்களே,

மானியக் கோரிக்கை எண். 8, தேர்தல்கள் என்பதன் கீழ் 1990-91-ஆம் ஆண்டு நிதியாண்டில் செலவுகளுக்காக ரூ. 1,53,27,000, அரசுக்கு வழங்க வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். இம்மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் படும் நிதி பெரும்பாலும் முறையான தேர்தல் அமைப்பில் உள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம், பயணப்படி, செலவுகளுக்கும், தேர்தல் நிர்வாகத்தின் சீரான நடைமுறைக்காகவும், தற்போது நடைபெற்றுவரும் வாக்காளர் பட்டியல்கள் சுருக்கத் திருத்தத்திற்காகவும் பயன் படுத்தப்படுகிறது.

2. தமிழக சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் ஒரே நாளில் 21-1-1989 அன்று செவ்வனே நடத்தப்பட்டது. அவ்வாறே நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலும் ஒரே நாளில் 24-11-1989 அன்று தமிழகத்தில் நடைபெற்றது. தமிழக சட்டமன்றப் பேரவைக்கும், நாடாளுமறத்திற்கும் சென்ற ஆண்டு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றதால், இவ்விரு அவைகளுக்கும் அடுத்த பொதுத் தேர்தல்கள் 1994-ஆம் ஆண்டு வாக்கில் நடைபெற வேண்டும். தற்சமயம் நம் மாநிலத்திலிருந்து நாடாளுமன்ற இரு அவைகளிலும் காலியிடம் ஏதும் இல்லை. அவ்வாறே சட்டமன்ற பேரவையிலும் காலியிடம் ஏதும் இல்லை. சட்ட மேலவையை தமிழ்நாட்டில் மீண்டும் அமைத்தல் குறித்த, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தீர்மானம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. பழனி நாடாளுமன்ற தொகுதியில் அடங்கியுள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் 1-1-1990-ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு சுருக்க முறையில் ஏற்கெனவே திருத்தப்பட்டு வெளியிடப்பட்டுவிட்டது. தற்போது இத்தொகுதிகள் நீங்கலாக பிற சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் சுருக்க முறையில் திருத்தம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வாக்காளர்களின் இறுதிப் பட்டியல் 16-5-1990 அன்று வெளியிடப்படும்.

1990 மே 5]

3. தேர்தல் மானியக் கோரிக்கையை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் சுருக்கத்தை தந்துள்ளேன். இதனை ஏற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்:

1990-91-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் கோரிக்கை எண். 8 கொள்கை விளக்கக் குறிப்பு—தேர்தல்கள்.

''மானியக் கோரிக்கை எண். 8.—தேர்தல்கள்'' என்பதன் கீழ் 1990-91-ம் ஆண்டில் கீழ்குறித்த இனங்களுக்குச் செலவிட தேவைப்படும் தொகை ரூ. 1,53,27,000 (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

2015. தேர்தல்கள் (திட்டத்தில் சேராதது) :

	ரூபாய்.
102. தேர்தல் அதிகாரிகள் :	
எஎ. சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள்.	1,16,93,000
எபி. மேலவைத் தொகுதிகள் ..	11,000
103. வாக்காளர் பட்டியலைத் தயாரித்து அச்சிடுதல் :	
எஎ. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள்.	31,43,000
எசி. மேலவைத் தொகுதிகள் ..	2,000
104. நாடாளுமன்ற மக்கள் அவைக்கும் மாநிலச் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் அவற்றை நடத்துவதற்கான செலவுகள்.	3,42,000
105. நாடாளுமன்றத்துக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு ஆகும் செலவுகள் :	
எஎ. இடைத் தேர்தல்கள் ..	13,000
எபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல்கள்	15,000
106. மாநிலச் சட்டமன்றத்திற்குத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :	
எஎ. மாநில சட்டமன்றப்பேரவை ..	94,000
எபி. சட்டமன்ற மேலவை ..	15,000
மொத்தம் ..	1,53,27,000

[1990 மே 5

2. மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விளக்கமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்குச் செலவு செய்யப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது —

102. தேர்தல் அதிகாரிகள் :

எஎ. சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் :

மதிப்பீடு ரூ. 1,16,93,000 ரூ. 1,03,36,000, ரூ. 13,57,000).

தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு, இணைத்தலைமைத் தேர்தல் அதிகாரியும் சார்புச் செயலாளரும் அலுவலகப் பணியில் உதவி புரிகின்றனர். மேலும் பொதுத் (தேர்தல்) துறையில் நிலையான ஆறு பிரிவுகள் உள்ளன.

2. வெளியூர் பகுதிகளில் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்கள் (சென்னை நீங்கலாக), வட்டாட்சியர் அலுவலகங்கள், தேர்தல் பதிவு அதிகாரிகளாகப் பொறுப்பு வகிக்கும் வருவாய் கோட்ட அதிகாரிகளின் அலுவலகங்கள், சேலம், திருச்சிராப்பள்ளி நகராட்சிகளின் ஆணையர் அலுவலகங்கள் மற்றும் கோயம்புத்தூர், மதுரை மாநகராட்சிகளின் ஆணையர் அலுவலகங்கள் ஆகியவற்றில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனிப்பதற்கென நிலையான அடிப்படையில் ஓர் உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில், வட்டாட்சியர் ஒருவர், உதவியாளர் இருவர், இளநிலை உதவியாளர் ஒருவர், தட்டச்சர் ஒருவர், சிற்றெழுத்தர் ஒருவர், அலுவலக உதவியாளர் ஒருவர் ஆகியோர் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலே குறிப்பிட்ட நிலையான அலுவலர்கள், ஊழியர்களின் ஊதியச் செலவுகள் தவிர, மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், தேர்தல் பதிவு அதிகாரிகள், உதவித் தேர்தல் பதிவு அதிகாரிகள் ஆகியோரின் பயணச் செலவுகளும் இத் தலைப்பின்கீழ் அடங்கும். அவர்களின் அலுவலகச் செலவுகள், எதிர்பாராத செலவினங்கள், தபால், தந்தி, தொலைபேசிக் கட்டணங்கள், தேர்தல் சார்பாக சிறப்புப் பணிகளுக்காக வழங்கப்படும் ஊதியங்கள் போன்றவையும் இக் கணக்குத் தலைப்பின்கீழ் அடங்கும். மேலும் அகவிலைப்படி, பொங்கல் பரிசு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 13,57,000, இந்த உப தலைப்பின் கீழ் அடங்கும். இச் செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மத்திய அரசு பகிர்ந்து கொள்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

1990 மே 5]

102. தேர்தல் அதிகாரிகள் :

எபி. மேலவைத் தொகுதிகள் :

மதிப்பீடுகள் : ரூ. 11,000.

மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் திருத்தியமைக்கும் பணிக்காக அவ்வப்போது நியமிக்கப்படும் தற்காலிகப் பணியாளர்களின் சம்பளம் போன்றவை இத் தலைப்பின்கீழ் அடங்கும். மேலவை மீண்டும் அமைப்பதற்கான தீர்மானம், சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு முன்னமே அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. எனவே இத்தலைப்பின் கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. மாநில அரசே மொத்த செலவினையும் ஏற்றுக் கொள்ளுகிறது.

103. வாக்காளர் பட்டியல்களை தயாரித்து அச்சிடுதல் :

எஎ. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள் —

மதிப்பீடு: ரூ. 31,43,000.

இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காக தற்காலிகமாக நியமிக்கப் படும் அலுவலர்கள், பணியாளர்களின் சம்பளம், எழுது பொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப் பின் கீழ் அடங்கும்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வாக்காளர் பட்டியல் சுருக்கத் திருத்தத்திற்காக தற்காலிகமாக நியமிக் கப்படும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஊதியத் திற்கும் சென்னை ஆவணக்காப்பகத்தில் வாக்காளர் பட்டியல் களைக் காப்பதற்காக நிலையாக நியமிக்கப்பட்டுள்ள ஓர் உதவியாளர், ஒரு சிற்றெழுத்தர் ஆகியோரின் சம்பளச் செலவுகளுக்காகவும் மேலே குறிப்பிட்ட அளவில் நிதி ஒதுக் கீடு தேவைப்படுகிறது.

தற்போது 1-1-1990ஐ அடிப்படையாக வைத்து வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான சுருக்கத் திருத்தம்

நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதன் அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

1.	தற்போதைய பட்டியல்களை வரைவு பட்டியல்களாக வெளியிடுதல்.	2—4—90 திங்கட்கிழமை.
2.	பட்டியல்களில் பெயர்களைச் சேர்க்கவும் நீக்கவும் மனுக்கள் பெற காலவரை.	2—4—1990 திங்கட்கிழமை 2—5—1990 புதன் முதல் கிழமை வரை.
3.	மனுக்கள் மீது முடி வெடுத்தல் மற்றும் இறுதி திருத்தப்பட்டியல்கள் அச்சிடுதல்.	3—5—1990 வியாழக்கிழமை முதல் 15—5—90 செவ்வாய் கிழமை வரை.
4.	பட்டியல்கள் இறுதி வெளியீடு.	16—5—1990 புதன்கிழமை.

இச்செலவினங்களை மாநில அரசும் மைய அரசும் சரிபாதியாகப் பகிர்ந்து கொள்ளுகின்றன.

103. வாக்காளர் பட்டில்களைத் தயாரித்து அச்சிடுதல் :

எசி. மேலவைத் தொகுதிகள் :—

மதிப்பீடு : ரூ. 2,000.

மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை அச்சிடுவதற்கான செலவுகள் மட்டும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். மேலவை மீண்டும் அமைப்பதற்கான தீர்மானம், சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே இத்தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. மாநில அரசே மொத்த செலவினையும் ஏற்றுக் கொள்ளுகிறது.

104. நாடாளுமன்ற மக்கள் அவைக்கும், மாநில சட்டமன்றப் பேரவைக்கும் ஒரேசமயத்தில் தேர்தல் நடைபெறுகையில் இவற்றை நடத்துவதற்கான செலவுகள் :

மதிப்பீடு : ரூ. 3,42,000.

நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இதன் கீழ் அடங்கும். 1989-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் சட்டமன்றப் பேரவைக்கும் நவம்பர் திங்களில் நாடாளுமன்றத்திற்கும் பொதுத் தேர்தல்கள் தனித்தனியாக நடைபெற்றன. மாவட்டங்களில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1990 மே 5]

வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள தனியார் கட்டடங்களுக்கான வாடகை, அதற்கான காவலாளர்களின் சம்பளம், வாக்குப்பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், பொதுத் (தேர்தல்) துறையில் உள்ள மோட்டார் வாகனங்களின் பராமரிப்பு பெட்ரோல் செலவுகள் போன்ற ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய செலவினங்கள் இதன் கீழ் அடங்கும். இதற்கான செலவினங்களுக்காக இத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மத்திய அரசு பகிர்ந்து கொள்ளுகிறது.

105. நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :

எஎ. இடைத்தேர்தல்கள் :

மதிப்பீடு : ரூ. 13,000.

நாடாளுமன்றத் தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் நடைபெற்றால், அதற்காகும் அனைத்து செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். தற்சமயம் இம்மாநிலத்தைச் சேர்ந்த எந்த நாடாளுமன்றத் தொகுதியும் காலியாக இல்லை. இத்தலைப்பின் கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச் செலவினங்கள் முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளுகிறது.

105. நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :

எபி. நாடாளுமன்றத் தேர்தல்கள் :—

மதிப்பீடு : ரூ. 15,000.

நாடாளுமன்றத்திற்குத் தனியே பொதுத்தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப் பெற்று பின்னர் மைய அரசினால் திருப்பித்தரப்படும்.

நாடாளுமன்றத்திற்கு பொதுத்தேர்தல்கள் 1989 நவம்பர் திங்களில் நடைபெற்றன. எனவே நாடாளுமன்றத்திற்கான அடுத்த பொதுத்தேர்தல் 1994-ம் ஆண்டு வாக்கில் தான் நடைபெற வேண்டும். இத்தலைப்பின் கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மத்திய அரசு மேற்கொள்ளுகிறது.

[1990 மே 5

106. மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :

எஎ. மாநிலச் சட்டமன்றப் பேரவை :

மதிப்பீடு : ரூ. 94,000.

தனியாக மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குப் பொதுத் தேர்தலோ இடைத்தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன் கீழ் அடங்கும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு 1989 சனவரித் திங்களில் பொதுத்தேர்தல்கள் நடைபெற்றன. தலைமைச் செயலகத்துறைகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் பொதுத்தேர்தல் துறையில் ப்ளெயின் பேப்பர் காப்பியர் ஒன்று வாங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. இவற்றிற்கான காகிதம் மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்காக 1990-91-ல் இத்தலைப்பின் கீழ் மேற்கண்ட நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசு மேற்கொள்ளுகிறது.

106. மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :

எபி. சட்டமன்ற மேலவை :

மதிப்பீடு : ரூ. 14,000.

மேலவைத் தொகுதிகளுக்கு தேர்தல் நடக்கும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் இத்தலைப்பின் கீழ் கணக்கிடப்படுகின்றன.

மேலவை மீண்டும் அமைப்பதற்கான தீர்மானம் சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே இத்தலைப்பின் கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசே இதன் மொத்தச் செலவுகளையும் ஏற்றுக் கொள்கிறது.

———

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS